வராது—வந்திருக்காது. ஆகவே தாங்கள் எழுப்பிய பிரச்சினையை எழுத்தின் மூலமாகக் கொடுங்கள். தயவு செய்து உட்காருங்கள். உங்களுடைய பிரச்சினையைப் புரிந்து கொண்டேன்.

(முற்பகல் 10–10)

திரு. எம். ஏ. லத்தீப் : நான் ஒரு ஒழுங்குப்பிரச்சினையைத்தான் எழுப்பினேன். 184-வது விதியின் கீழ் அந்தப் பத்திரிகைகளின்மீது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது சபையில் நடந்த பிரச்சினையின்மீது வேண்டுமென்றால் உடனே உரிமைப் பிரச்சினையைக் கிளப்பலாம். நேற்று நடந்த விஷயத்தின்மீது உரிமைப் பிரச்சினை கிளப்ப வேண்டுமானால், எந்த விதியின்கீழ் கிளப்புகிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டு அறையிலே தாருங்கள். நான் அதைப் பரிசீலித்த பிறகு முடிவு சொல்கிறேன். இப்பொழுது அமருங்கள்.

(3) அறிவிப்பு.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் (Tamil Nadu Land Improvement Board) தேர்தலுக்காக கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன:-

1. திரு. செ. இராமலிங்கம்,

2. திரு. ஆர். சி. சுப்பிரமணியம்,

3. திரு. கி. பெ. காத்தமுத்து.

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக இருப்பதால், மேற்கண்ட மூவரும் தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கிறேன்.

அடுத்து, 41-வது விதியின்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவனத்தை ஈர்த்தல். திரு. பெ. சு. திருவேங்கடம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS